**கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் பங்களிப்புப் பண வருமானம் ரூபா 37,806,761 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் பங்களிப்புப் பண வருமானமாக ரூபா 35,029,761 காண்பிக்கப்பட்டமையினால் பங்களிப்புப் பண வருமானம் ரூபா 2,777,000 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் பிரிவிற்கு தகவல்கள் சமர்ப்பிப்பதில் தாமதத்தின் அடிப்படையில் இந்த பிரச்சினை ஏற்பட்டிருந்தது. | சரியான பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெறவேண்டிய பங்களிப்புப் பண மீதி ரூபா 121,945,590 ஆக | மேற்கூறப்பட்ட பதில் உரித்தாகும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பெறவேண்டிய பங்களிப்புப் பணம் ரூபா 119,458,972 ஆக ரூபா 2,486,618 தொகைக் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | முற்பணமாகக் கிடைத்த பங்களிப்புப் பண மீதி ரூபா 2,007,744 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பாக முற்பணமாகக் கிடைத்த பங்களிப்புப் பணம் ரூபா 2,298,123 ஆக ரூபா 290,379 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் பிரிவிற்கு தகவல்கள் சமர்ப்பிப்பதில் தாமதத்தின் அடிப்படையில் இந்த பிரச்சினை ஏற்பட்டிருந்தது. | சரியான பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கூட்டுறவுச் சங்கக் கடன் | 46,747,217 | மீதி உறுதிப்படுத்தல் | இதற்கான மீதி உறுதிப்படுத்தலை சமர்ப்பிக்குமாறு சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படவில்லை. | மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய உறுதிப்படுத்தல் காணப்படல் வேண்டும். |
| (ஆ) | தீர்க்கப்படாத முற்கடன் | 45,525 | மீதி உறுதிப்படுத்தல் | இது தொடர்பான தகவல்களை கண்டறிந்து பிரச்சினைகளின் அடிப்படையில் மீதி உறுதிப்படுத்தல்களை சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | -மேற்படி- |
| (இ) | மிகை நிதியத்தை மாற்றுதல் | 20,000 | மீதி உறுதிப்படுத்தல் | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | கடன் வழங்குதல் ஊவா மாகாணம் | 5,439,905 | மீதி உறுதிப்படுத்தல் | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 79,412,313 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 68,573,375 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10,838,938 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பங்களிப்புப் பண வருமானம் ரூபா 36,716,953 இனால் குறவடைந்த போதிலும், முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 43,840,907 இனாலும், நானாவித வருமானம் ரூபா 2,629,917 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) கூட்டுறவுச் சங்கக் கடன்** | | |
| (i) 2022 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு செயற்பாடற்ற 54 கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து ரூபா 31,287,451 தொகையும் செயற்பாடிலுள்ள இரண்டு சங்கங்களில் ரூபா 3,016,480 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 34,303,931 நிலுவைக் கடன் மீதி காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 57,297 கடன் தவணைப்பணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கூட்டுறவுச் சங்கக் கடன் ரூபா 34,019,114 மற்றும் வட்டி ரூபா 8,346,192 ஆகும். அந்தக் கடன் மற்றும் வட்டிகளுக்கிடையே 21 வருடங்கள் முதல் 58 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து அறவிடப்படாத மீதியும் உள்ளதுடன் அதில் 18 சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 8,420,900 ஆன கடன் தொகையில் எந்தவொரு கடன் தவணைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 2012 ஆம் ஆண்டின் போது வரையறுக்கப்பட்ட கொபைகனே பல்நோக்கு சேவை கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 3,000,000 ஆன கடன் பணம் 54 | இந்தக் கடன் மிகவும் பழைய கடனாக இருந்ததுடன் மாகாண ஆணையாளர்களினால் பெயரிடப்பட்டு அனுப்பப்பட்ட உத்தியோகத்தர்களை சங்கத்துடன் தொடர்புபடுத்தி இந்த அறவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. செயற்பாட்டிலுள்ள கடனின் கீழுள்ள கொபைகனே பல்நோக்கு சேவை கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தவணைகளில் செலுத்தி பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் அந்தக் கடன் தொகையில் 2013 ஆம் ஆண்டின் போது ஒரு தவணைப்பணம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட 1997 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,666,000 ஆன கூட்டுறவு பாடசாலைக் கடன், 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,838,512 ஆன செயலாற்றல் முற்பணம் மற்றும் ரூபா 1,021,459 ஆன கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1997 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற கடன் தொடர்பாக குறித்துரைத்த தகவல்களை கண்டறிய முடியாமையால் தீர்த்து வைப்பதில் பிரச்சினைகள் காணப்பட்டது.<br>2012 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற பெறவேண்டிய செயலாற்றல் முற்பணத்தில் ஒரு பகுதி தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் கிடைத்த உறுதிப்படுத்தலின் அடிப்படையில் மிகுதி மீதிகளை தீர்த்து வைப்பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.<br>ரூபா 1,021,459 கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணத்தில் மாதாந்தம் ரூபா 11,607 தொகை அறவிடப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் வரையில் ரூபா 208,969 தொகை அறவிடப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பங்களிப்புப் பண மீதி ரூபா 119,458,972 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 61,319,008 மற்றும் ரூபா 17,295,927 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 78,614,935 அதாவது 66 சதவீதம் ஆன உயர்ந்த சதவீதமொன்று வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கல்வி சேவை ஊழியர்களின் கூட்டுறவு சங்கம் மற்றும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு அரச சேவை சணச என்ற சங்கம் இரண்டிலிருந்தும் அறவிட வேண்டி காணப்பட்டது. பெற | தற்போது திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தின் ஆலோசனையின் படி நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எதிர்வரும் 02 மாதங்களில் கூட்டுறவுச் சங்கங்களுடன் கலந்துரையாடி பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய பங்களிப்புப் பண மீதியில் 12 சங்கங்களில் இருந்து 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பங்களிப்புப் பணம் கிடைக்காதிருந்ததுடன் அந்த மீதி ரூபா 5,394,642 ஆகும். | | |
| (ஆ) | **சுழற்சி நிதியம்** | | |
| (i) | நிதியத்தின் மாகாணக் கூட்டுறவுச் சங்கங்கள் 09 இற்காக 2010 ஆம் ஆண்டிலும், 2011 ஆம் ஆண்டிலும் ரூபா 290 மில்லியன் கடன் பணம் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கடன் பணத்திற்கு இடையே வட மத்திய மாகாண நுகர்வோர் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணத்தில் ரூபா 7,126,500 தொகை மற்றும் ஊவா மாகாண நுகர்வோர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன் பணத்தில் ரூபா 800,000 இலிருந்து எந்தவொரு தவணைப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய கடன் பணத்தில் வட மத்திய மாகாண நுகர்வோர் சங்கத்திற்கும், ஊவா மாகாண நுகர்வோர் சங்கத்திற்கும் வழங்கப்பட்ட கடன் பணத்தை மாத்திரம் அறவிடுவதில் பிரச்சினைகள் காணப்பட்டது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கூட்டுறவு நுகர்வோர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன் பணத்தின் பெறுமதி ரூபா 166 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த தொகையில் 2022 திசெம்பர் 31 வரையில் கிடைக்க வேண்டிய பணம் ரூபா 44 மில்லியன் ஆகும். அந்த கடன் உடன்படிக்கையின் படி கடன் பெற்று மாதமொன்றில் அல்லது இரண்டு மாதங்களுக்குள் அந்த கடன் தீர்க்க வேண்டி இருந்தமை குறிப்பிடப்பட்ட போதும் 10 வருடங்கள் கடந்திருந்த போதும் அந்த கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுறவு நுகர்வோர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட கடனை அறவிடல் தொடர்பாக தொடர்ச்சியாக அறிவித்தல் மேற்கொள்ளப்பட்ட போதும் அந்த கடன் அறவிடுவதில் பிரச்சினைகள் காணப்பட்டது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2011 ஆம் ஆண்டின் போது கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 50 மில்லியன் கடன் தொகையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20.4 மில்லியன் | கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடனை அறவிடல் தொடர்பாக தொடர்ச்சியாக அறிவித்தல் மேற்கொள்ளப்பட்ட போதும் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவையாக காணப்பட்டதுடன், அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த கடன் அறவிடுவதில் பிரச்சினைகள் காணப்பட்டது. | |
| (iv) | கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தில் இருந்து 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 152.5 மில்லியன் தொகை கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு வழங்கப்பட்டிந்தது. அந்த தொகையில் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 60 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 92.5 மில்லியன் ஆகும். | இது தொடர்பாக இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஊடாக கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு 2022.01.13 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இது தொடர்பாக இதுவரை நல்ல பதிலொன்று காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1983 இன் 32 ஆம் இலக்க கூட்டுறவு சங்க (திருத்த) சட்டத்தின் 43(அ) பிரிவின் பிரகாரம் சகல பதிவுசெய்த சங்கங்களும், சங்கங்களின் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஏனைய சகல கொடுக்கல் வாங்கல் தொடர்பான சரியான கணக்குகள் பேணிச் செல்லப்பட வேண்டியிருந்ததுடன், அந்த கணக்கு கூற்றுக்கள் அதற்குரிய நிதி ஆண்டு முடிவடைந்து 03 மாதங்களுக்குள் பதிவாளருக்கு அல்லது அவருக்கு அதிகாரமளிக்கப்பட்ட ஏனைய ஒருவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 53 சங்கங்களும், 16 மன்றங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன. எனினும், அதனிடையே 2021 ஆம் ஆண்டிற்காக 32 சங்கங்களில் இருந்தும் 05 மன்றங்களில் இருந்தும் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | கூட்டுறவு சங்க சட்டத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1983 இன் 32 ஆம் இலக்க கூட்டுறவு சங்க (திருத்த) | கூட்டுறவு சங்க சட்டத்தில் காணப்படுகின்ற | கூட்டுறவு சங்க சட்டத்தின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | சட்டத்தின் 43(ஆ) பகுதியின் 1,2,3 உப பிரிவுகளில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் சகல பதிவு செய்யப்பட்ட சங்கங்களினாலும், பாதீடு தயாரித்து அது உரித்தாகின்ற நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் சங்கத்தின் பொது சபையின் மூலம் அங்கீகரித்து அதன் பிரதியொன்று பதிவாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். எனினும், 2022 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்ட 53 சங்கங்கள் மற்றும் 16 மன்றங்களுக்கு இடையே 48 சங்கங்கள் மற்றும் 12 மன்றங்களின் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் சங்கங்களின் எதிர்வரும் ஆண்டிற்கான அபிவிருத்தி திட்டம் மற்றும் பாதீட்டு மதிப்பீட்டிற்காக சங்கம்/மன்றத்தின் பொதுச் சபை அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் அந்த ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை திணைக்களத்திற்கு அனுப்புமாறு கூட்டுறவு மேற்பார்வை உத்தியோகத்தர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பாதீட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1992 இன் 11 ஆம் இலக்க கூட்டுறவு சங்க (திருத்த) சட்டத்தின் கீழ் 66(அ)(1) பிரிவின் பிரகாரம் பதிவுசெய்த கூட்டுறவு சங்க தலைவரினால் மற்றும் செயற்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரினாலும், வருடாந்தம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு குறித்துரைத்த படிவத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக பதிவு செய்த 69 சங்கங்கள் மற்றும் மன்றங்களில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று பதிவு செய்த 07 சங்கங்கள் மற்றும் மன்றங்களினால் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் மூலம் ஒவ்வொரு தடவையும் இது தொடர்பாக சங்கம்/மன்றங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிவித்தலின் அடிப்படையில் 07 சங்கங்கள்/மன்றங்களில் இருந்து மாத்திரமே பதிலளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சங்கங்களுக்கு மீண்டும் அறிவித்து சொத்துக்கள்/ கூற்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுறவு சங்க சட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |